ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
For Private Circulation Only

ECHOES
INDIA

ஜூலை 2013 மலர் 6, இதழ் 4




## மாஸ்டரைப் பற்றிய செய்திகள்

### மே 2013

பூஜ்ய பாபூஜி மகராஜின் பிறந்தநாள் விழா முடிவுற்ற சிறிது காலத்திலேயே மாஸ்டர் முற்றிலும் சோர்வடைந்தார். அவர் களைப்புறுவதும், நீண்ட நேரம் ஓய்வெடுப்பதுமாகவே இருந்து வந்தார். விழா முடியும் வரை, அவர் எவ்வாறு தமது மனோதிடத்தைப் பயன்படுத்தி இடைவிடாது தொடர்ந்து செயல்பட்டார் என்பதையும், அதன் பின்னர் அதை அப்படியே விட்டுவிட்டதையும் நம்மால் காண முடிந்தது. அவர், சிகிச்சை, மருந்துகள் மற்றும் இன்னபிறவற்றால் பாதிக்கப்பட்டு, மிக்க களைப்புடனும் தூக்கத்துடனும் காணப்பட்டார். ஆனால், அவர் புத்துணர்ச்சியுடன் காணப்பட்ட நாட்களும் இருந்தன. ஊகிக்க முடியாத அளவுக்கு ஒரு நாள் நலமாக இருப்பவர், மறு நாள் முற்றிலும் களைப்புறுவார். மாஸ்டரின் துன்பத்தைக் காணும் அமைதியான பார்வையாளர்களாய் இருப்பது மிகவும் வருத்தமாக இருந்த போதிலும், நாம் அவருக்காகப் பிரார்த்தனை மட்டுமே செய்ய முடியும்.

மே மாத முதல் வார முடிவில் மாஸ்டரின் கதிர்வீச்சு சிகிச்சை முடிவுக்கு வந்தது. வலி குறைந்துவிட்ட போதிலும், அவர் மருந்துகள் மற்றும் வலி நிவாரணிகளை எடுத்துக்கொண்டு தான் இருந்தார். நடக்க வேண்டாமென்று அறிவுறுத்தப்பட்டிருந்ததால், மாஸ்டர் சக்கர நாற்காலியில் போய்வந்து கொண்டிருந்தார். தேவைப்படும்போது வாக்கரை பயன்படுத்தி சில அடிகள் நடக்குமாறு டாக்டர்கள் பரிந்துரைத்தனர். இது, மாஸ்டரின் நடமாட்டத்தைக் குறைத்துவிட்ட போதிலும், அவர் இப்புதிய முறையை ஏற்றுக்கொண்டு சக்கர நாற்காலியில் பிரகாசமான சிரிப்புடன் வளைய வந்து கொண்டிருக்கிறார். மாஸ்டர், சத்சங்கம் நடத்த தியான மண்டபத்திற்கு வரும் அந்த அரிய நாட்களில் மேடையில், சக்கர நாற்காலியில் ஒளிவீசும் மலர்ந்த முகத்துடன் அவர் இருப்பதை நம்மால் காணமுடியும். மே 12, 2013, ஞாயிற்றுக்கிழமையன்று மாஸ்டர் தியான மண்டபத்திற்கு வந்து ஒரு மணி நேரத்திற்கும் மேல் சத்சங்கம் நடத்தினார்.

மாஸ்டர், பல நாட்கள் மாலை வேளைகளில் காட்டேஜின் முன்புறத்திற்கு வந்து சுமார் ஒரு மணி நேரம் அமர்வார். இவ்விதம் பல அப்யாசிகளால் மாஸ்டரை சந்திக்க முடிந்தது. மாஸ்டருடன் தனிப்பட்ட முறையில் பேச இயலாதபோதிலும், அவரது பிரசன்னத்தில் அமைதியில் ஆழ்ந்து அமரும் வாய்ப்பாக அது இருந்தது. சில சமயங்களில் மாஸ்டர் பேசியபோதிலும், பெரும்பாலும் அவர் அமைதியாகவே இருப்பார். காட்டேஜின் முன்னால் இருக்கும் பெரிய மரங்களில் வசிக்கும் பல பறவைகள், மாஸ்டர் வெளியே வந்து அமரும்போது மகிழ்ச்சியில் கீறிச்சொலிக்கும்.

மே மாத மத்தியில், ஒரு மருத்துவ சோதனை மற்றும் மருந்துகளுடன் மாஸ்டர் தனது மருத்துவ சிகிச்சையை மேலும் தொடர்ந்தார். எப்போது மாஸ்டர் எந்த மருந்தை எடுத்துக் கொண்டாலும், அதனால் பாதிக்கப்பட்டு முற்றிலும் சோர்வடைந்து காணப்படுகிறார். கவனத்திற்குரிய மற்றொரு விஷயம் என்னவெனில்,










செய்யவேண்டிய வேலை இருக்கும்போது, எவ்வளவு வலியை அவர் அனுபவித்துக்கொண்டிருந்தாலும் சரி, அது நமது பார்வைக்கு தெரிவதில்லை. மற்றும் அவர், அவ்வேலையை மேற்கொண்டு அதை முடித்துவிடுகிறார். வேலை செய்து முடித்த பிறகு வலி திரும்பவும் தெரிந்தது. இம்முறை அவருக்களித்த மருத்துவ சிகிச்சைக்கு பின் பத்து நாட்களுக்கு சிறிது சோர்வாக இருந்தார். நாளின் பெரும்பாலான நேரத்தை ஓய்வெடுப்பதில் செலவிட்டார். மாத இறுதி வரையிலும், மாஸ்டர் வலியுடன் தென்பட்டதால், அவருக்கு MRI ஸ்கேன் எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. ஸ்கேனின் முடிவு நல்லதாக இருந்தபடியால், மாஸ்டரும் மற்ற மருத்துவர்களும் ஆறுதலடைந்தனர்.

மாஸ்டர் ஒரு மின்மப்பயன்பாட்டைச் சார்ந்த நாற்காலியைப் பெற்றிருக்கிறார். அதனை, ஒரு பொத்தானைக் கொண்டு மேலே உயர்த்தவும், கீழே இறக்கவும் முடியும். மாஸ்டர் அதனை ஒரு குழந்தையின் மகிழ்வுடன் இயக்குகிறார்.

மாத இறுதியில், மாஸ்டர் நலமுடன் இருந்தார். அவர் உடல் நலம் முன்னேறியவுடன், அவரது மிகவும் முக்கியமான, முதல் வேலையான பிரிபெக்ட் சிட்டிங்களில் ஈடுபட்டார். பெரும்பாலான நாட்களில், பிரிபெக்ட் சிட்டிங் அதிகாலையிலும், மற்றும் காலை உணவிற்கு பின் சில அப்யாசிகளுக்கு தனி சிட்டிங் அல்லது ஒரு குழுவுக்கு சிட்டிங்கும் அளிப்பார்.

ஒரு மாலை வேளையில், காட்டேஜ் முற்றத்தில், சகோ.குர்பிரீத் சிங் அவர்களின் பஜனை நிகழ்ச்சி இருந்தது. மாஸ்டர் தனது அலுவலகத்திலும், அப்யாசிகள் முற்றத்திலும் அமர்ந்திருந்தனர். சில பாடல்களுக்கு பின், மாஸ்டர் களைப்படைந்ததால், படுத்துக்கொள்வதற்காக உள்ளே சென்றார். ஆனால் சகோ. குர்பிரீத்தை தொடர்ந்து பாடுமாறு கேட்டுக் கொண்டார்.

மே 28, செவ்வாய்க்கிழமை, சகோ.P.R.கிருஷ்ணாவின் 56வது பிறந்தநாள். மாஸ்டர் அவரை வாழ்த்தி, ஆசீர்வதித்து, மேலும் அறையிலிருந்த அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார். வெப்பம் நிறைந்த கோடைகாலம் முடிவுற்றதன் அறிகுறியாக, அன்று மாலை பெய்த மழையில் சென்னை குளிர்ச்சியடைந்தது.

அதிகாலையில் காட்டேஜுக்கு வெளியில் வந்து அமர்வதை, மாஸ்டர் மற்றொரு புதிய வழக்கமாகக் கொண்டிருந்தார். அவர் காலை 5:00 மணிக்கு எழுந்து, 5:30 மணியளவில் வெளியில் வந்து, பின் 6:15 மணியளவில் உள்ளே செல்வார். அப்போது பிரிபெக்ட் சிட்டிங் எடுத்துக் கொள்ள இருப்பவரும் வந்து விடுவார். மாஸ்டரும் அதன் பின் பிரிபெக்ட் சிட்டிங்கை தொடங்குவார். குறிப்பாக தட்ப வெப்பம் குளிரத் தொடங்கியதனாலேயே, இவ்வாறாக அடிக்கடி நிகழ்வதாயிற்று. அனைத்திற்கும் மேலாக மாஸ்டரின் உடல் நிலை முன்னேறி வருகிறது. அவர் நடமாட்டத்துடன் மெல்ல தனது தினசரி வழக்கங்களைத் திரும்பவும் தொடர்கிறார்.





**ஜூன் 2013**

மாஸ்டரின் உடல்நலம் தேறியவுடன், அவரே பிரிபெக்ட்சிட்டிங் கொடுக்கத் தொடங்கினார். ஜூன்1ம் தேதி, அமெரிக்காவில் முதன்முதலாக கட்டப்பட்ட ரெயிலின் மாதிரியை, ஒரு அப்பியாசி மாஸ்டருக்கு அளித்தார். மாஸ்டர் அதனுடைய பூரணத்துவத்தைப் பார்த்து மிகவும் கவரப்பட்டார். அவருடைய மகிழ்ச்சியின் அதிர்வலைகள், அனைவருக்கும் பரவியது. மாஸ்டர் அதனை கவனமாக எடுத்து, தன்னுடைய அலமாரியில் வைத்துக் கொண்டார்.

## LMOIS மாணவர்களுக்கான கருத்தரங்கு

ஒமேகா பள்ளியின் முன்னாள் மாணவர்களுக்காக 2 தொடர் கருத்தரங்குகள், ஜூன் முதல் மற்றும் இரண்டாவது வாரங்களில் ஒருங்கிணைக்கப்பட்டன. இக்கருத்தரங்குகளின் ஒருங்கிணைப்பாளர்கள் மாஸ்டரைச் சந்தித்து, ஒரு சிறு கலந்துரையாடல் மூலம், கருத்தரங்கைப் பற்றிய அவர்களது வினாக்களுக்கு விளக்கம் பெற்றனர்.

மாலை நேரங்களில், மாஸ்டர், காட்டேஜின் நுழைவு வாயில் வரை வாக்கருடன் நடந்து சென்று, பின்னர் சக்கர நாற்காலியில் காட்டேஜின் முன்பு அமர்வது வழக்கம். இது, அவருக்கு நல்ல உடற்பயிற்சியினையும், புத்துணர்வான காற்றையும், அவர் மிகவும் எதிர்பார்த்திருக்கும் அப்யாசிகளைச் சந்திக்கும் வாய்ப்பையும் அளித்தது.


ஜூன் 2, ஞாயிறன்று மாஸ்டர் தியானகூடத்தில் ஒரு மணி நேர சத்சங்கம் வழங்கினார். சத்சங்கத்திற்குப் பிறகு காட்டேஜிற்கு சென்றார். முந்தைய நாள் மாலையிலும், அன்று காலையிலும், அவர் நிறைய அப்யாசிகளை சந்தித்திருந்ததால், காட்டேஜில் கூட்டம் அதிகமாக இல்லை. அப்யாசிகளின் இதயத்தில் ஏற்பட்ட மனநிறைவை ஒருவரால் உணர முடிந்தது. அது, மாஸ்டர் தன்னையே அனைத்து இதயங்களிலும் நிரப்பியது போலவும், அதனால் அனைவரும் மனநிறைவும், மகிழ்ச்சியும் பெற்றது போலவும் இருந்தது. "மகிழ்ச்சியானது மனநிறைவைத் தராது. ஆனால், மனநிறைவால் மகிழ்ச்சி கிடைக்கும்" என்று மாஸ்டர் கூறினார். மாஸ்டர் வெளியில் வந்து, சத்சங்கம் நடத்தி, சில வாரங்கள் ஆகியிருந்ததால், மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தார்.

அப்யாசிகளின் ஒரு சிறு குழுவுடன், மாஸ்டர் தன்னுடைய அலுவலகத்தில் பேசிக் கொண்டிருந்தபோது, வேடிக்கையாக ஆரம்பித்த அந்த பேச்சுக்களை, மாஸ்டர் கலந்துரையடலாக மாற்றினார்.

- வருமான வரித் துறையில் நடைபெறும் ஊழல்கள் பற்றி பேசியது: இன்றைய வாழ்க்கை பேராசை மற்றும் நேர்மையின்மையையே ஊக்குவிக்கின்றது.
- நீங்கள் எதைக் கண்டு பயப்படுகிறீர்களோ அதையே, உங்களை நோக்கி, பயமானது ஈர்க்கிறது. உங்களது பயம் தான், மற்றதன் மீது பயத்தைத் தோன்றும்படி செய்கிறது.
- நான்கு தலைமுறைகளாக அப்யாசிகளைக் கொண்ட ஒரே குடும்பம், நமது மாஸ்டரின் குடும்பம் மட்டுமே ஆகும்.

ஜூன் 3, திங்கள், ஒமேகாவின் முன்னாள் மாணவர் கருத்தரங்குகளின் முதல் நாளாகும். மாஸ்டர் 9 மணிக்கு, ஒரு மணி நேர சத்சங்கம் வழங்கினார். பின்னர் மாஸ்டர் தன்னுடைய ஊக்கப்படுத்துகிற உரையில், இந்தியாவில் உள்ள ஊழல்களின் பல்வேறு நிலைகளைப் பற்றியும், தங்களுக்கு மட்டுமல்லாது, நாட்டிற்கான எதிர்காலத்தையும் உருவாக்கும் பொறுப்பு, எவ்வாறு அடுத்த தலைமுறையினரைச் சார்ந்துள்ளது என்பது பற்றியும் குறிப்பிட்டார். இங்கிருக்கும் மாணவர்கள் ஒவ்வொருவரும், சமுதாயத்தின் அழுத்தங்கள் காரணமாக தங்களை மாற்றிக் கொள்ளாமல், ஒரு வினையூக்கியாக இருந்து, அவர்கள் மாறாமல் சமுதாயத்தில் மாற்றம் கொண்டு வரவேண்டுமென்றும் அவர் கூறினார். அவர்களிடமிருந்து தான் எதிர்பார்ப்பது அதை மட்டும் தான் என்றும், அதிக மதிப்பெண்கள் வாங்குவது மட்டும் முக்கியமல்ல, ஆனால், அவர்கள் நிச்சயமாக ஒரு நன்கு வடிவமைக்கப்பட்ட நல்ல மனிதர்களாக வெளிவர வேண்டும் என்பதே ஆகும் என்றும் கூறினார். அவர்கள் பேராசைக்கு இடம் தராமல், முன்னேறுவதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றார். பணம், மகிழ்ச்சியையோ, மனநிறைவையோ தராது, ஆனால், மனநிறைவு மகிழ்ச்சியைத் தரும் என்று மீண்டும் அறிவுறுத்தினார். பிறகு, மாஸ்டர் சில அப்யாசிகளை உரையாற்றும்படி கேட்டுக்கொண்டார். முன்னாள் மாணவர்கள் அனைவரும், தினமும் காலை 9மணி சத்சங்கத்திற்கு காட்டேஜிற்கு வரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர்.




## செயற்குழுக்கூட்டம்

ஜூன் 5ம் தேதி 7 திருமணங்கள் இருந்ததால், மாஸ்டர் சத்சங்கத்திற்கு செல்ல தயாரானார். ஆனால் அவர் சத்சங்கத்திற்குப் பின் செயற்குழுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டியிருந்ததால், மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் குடிலில் ஓய்வு எடுத்துக்கொண்டார். சகோ.கமலேஷ் தியானக் கூடத்திற்குச் சென்றார். செயற்குழு உறுப்பினர்கள் குடிலில் குழுமினர். மாஸ்டர் கூட்டத்தில் ஆரம்பம் முதல் இறுதி வரை கலந்துகொண்டார். சமீப காலத்தில் இது போன்று நிகழ்ந்தது இல்லை. பொதுவாக மாஸ்டர் கூட்டத்தின் இறுதி கட்டத்தில்தான் கலந்து கொள்வார். நிகழ்ச்சி நிரலினை படித்த பின்னர் அவர் தனது கருத்தினைத் தெரிவித்தார். சிங்கப்பூர் மற்றும் கட்டாரில் தியானக்கூடங்கள் கட்டப்பட்டது, LMOIS பள்ளிக்கு International Baccalaureate விருது அங்கிகரிக்கப்பட்டது, மற்றும் மிஷனில் உள்ள அப்யாசிகள் மற்றும் பிரபெக்ட்களுக்குத் தரம் உயர்த்தப்பட்ட பயிற்சித் திட்டம் போன்றவை நடைபெறுவது குறித்து மாஸ்டர் மகிழ்வுற்றார்.

**மாஸ்டர் இந்தியாவில் பெருகி வரும் ஆசிரமங்கள் பற்றி குறிப்பிட்டார். ஆனால் சகஜ மார்க்கத்திற்கு அர்ப்பணித்துக் கொண்ட குறைந்தது இரண்டு குடும்பத்தினராவது அங்கு தங்கி ஆசிரமங்களை கவனித்துக்கொள்ள விரும்பாதது குறித்து வருந்தினார். தன்னிடம், ஓய்வு பெற்ற அப்யாசிகள்/ பிரபெக்ட்களின் பட்டியல் உள்ளதாகவும், அவர்கள் எங்கு தேவைப்படுகின்றனரோ அங்கு சென்று வசிக்க அவர்கள் தயாராய் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.**

கூட்டத்தின் முடிவில் அவர் மெல்ல எழுந்து வாக்கரின் உதவியுடன் அலுவலகத்திற்குச் சென்றார். "அவர் வேதனையினை அளிக்கின்றபோது சக்தியினையும் அளிக்கின்றார்" என அவர் கூறியதைக் கேட்க முடிந்தது. மிகவும் களைப்படைந்த போதும் ஓய்வெடுக்கச் செல்லுமுன் அன்றைய தினம் திருமணம் ஆன மணமக்களை சந்தித்து, ஆசி வழங்கி, உரையாடியபின். புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

## LMOIS பள்ளி மாணவர்களுடன் உரையாடல்

ஒமேகா பள்ளி பழைய மாணவர்களுடன் மாஸ்டர் அதிக நேரம் செலவழித்தார். கருத்தரங்குக்கு வந்த 70 குழந்தைகள் கொண்ட குழுவினர், மாஸ்டரின் அலுவலகத்தில் குழுமி இருந்தனர். கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்திற்கும், அவர் உற்சாகத்துடன் பதில் அளித்தார்.

ஒரு சகோதரி அதிகாலையில் எழுந்து தியானம் செய்வது சிரமமாக இருக்கின்றதே என்று கேட்டபோது மாஸ்டர், "நான் ஒவ்வொரு இரவும் படுக்கை அறையில் இருந்தே பறவைகளின் ஒலியினைக் கேட்கிறேன். அதிகாலை 2.30 மணிக்கு ஒரே ஒரு பறவை, தூக்க கலக்கத்தில் கிறீச்சிடும். 3.30 மணிக்கு அரை டஜன் பறவைகள் பாட்டுப்பாட ஆரம்பிக்கும். 5.00மணிக்கு அவை அனைத்தும் விழித்து, பாட்டுப்பாடி ஒவ்வொன்றும் மற்றவற்றை கூப்பிடும். எனவே இதனை பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். 'சீக்கிரமே எழுந்து நான் என்ன செய்ய போகிறேன்' எனக் கூறாதீர்கள். உங்களுக்குத் தெரியும், என் அன்றைய பணியினை அது எதுவாக இருந்தபோதிலும் அதனை முடிக்காமல் நான் உறங்கப் போவதில்லை. நாளைக்கு என்று எது ஒன்றையும் விட்டு வைப்பதில்லை. எதனையும்! அது மின் அஞ்சலாகட்டும், அல்லது கடிதங்கள், சிட்டிங்குகள் எதுவாக இருப்பினும். 'நீங்கள் களைப்பாக இருக்கின்றீர்கள், கட்டாயம் ஓய்வு எடுக்க வேண்டும்' என்று இங்கு உள்ளவர்கள் சொல்வார்கள். 'ஓய்வு கிடையாது. பணி முடிந்தவுடன் தான் ஓய்வு', என்று நான் சொல்வேன். ஓய்வு என்பது இடையே இருப்பது இல்லை. வேலை முடிந்தவுடன் தான் ஓய்வு. இல்லை, இல்லை, நான் மிகவும் களைப்பு அடைந்துள்ளேன்... இல்லை நீங்கள் அவ்வளவாகக் களைப்பு அடையவில்லை. இது ஒரு தவறான பழக்கம். ஒழுக்கமின்மை தீய பழக்கம். ஒழுக்கம் என்பது நல்ல பழக்கம்.

திருமணம் பற்றி மாஸ்டர் கூறினார், "கண்களை முடிவு எடுக்க விடாதீர்கள். உங்கள் இதயத்தினை முடிவு செய்ய விடுங்கள். உங்கள் பெற்றோர்களின் கட்டாயத்திற்கு உட்படாதீர்கள். இது என்னுடைய வாழ்க்கை எனக் கூறுங்கள். உங்களுக்கென்று வாழ்க்கை உள்ளது. யாரை திருமணம் செய்ய வேண்டும் என நான் உங்களுக்குச் சொல்லவில்லை எனவே நீங்கள் எனக்கு யாரை திருமணம் செய்துகொள்ளவேண்டும் எனச் சொல்லாதீர்கள். எவரை எப்போது என என் இதயம் கூறுகின்றதோ அப்போது நான் திருமணம் செய்து கொள்வேன். ஜாதி, பணம் அல்லது வேறு எதுவும் முக்கியம் அல்ல, அமிதாப்பச்சன் கூட சரிதானே!!!"

ஒரு பெண் தான் அரசியல் படிக்க விரும்புவதாகக் கூறினார். மாஸ்டர், "அரசியல் ஒரு மோசமான பாடம். ஊழல் மற்றும் தீய ஒழுக்கம் நிறைந்தது. சட்டம் எனக்குப் பிடிக்காது. அரசியல் எனக்குப் பிடிக்காது. இவை இரண்டிலும் நீங்கள் பொய் சொல்லியாக வேண்டும். சத்யம் வதா, தர்மம் சரா போன்றவை முடியாத விஷயங்கள். நான் உயர் நிலையில் உள்ள வழக்கறிஞர்கள், நீதிபதிகள் ஆகியோரைச் சந்தித்து இருக்கி



கதவு திறக்கும்.நீ ஒற்றைப்பாதையில் போய்க்கொண்டிருந்தால் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் செல்லும் பாதையில் கிளைகள் இருந்து, மூன்று பாதைகள் பிரிந்தால் எதைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நீ யோசிக்க வேண்டியிருக்கும். ஆகையால் பல வாய்ப்புகள் இருக்கும்போது பிரச்சினையும் இருக்கும். மூன்றோ, ஐந்தோ அல்லது பதினைந்தோ பாதைகள் இருப்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கையில், எதைத் தேர்ந்தெடுப்பதென்று தெரியாததால் நீங்கள் பதற்றப்பட்டு, இரத்த அழுத்தம் கூடிவிடுகிறது. எது சரியென்று உங்கள் இதயத்திற்கு தெரிகிறதெனினும், இதயம் ஒரு பக்கமும் மனம் மற்றொரு பக்கமும் இழுக்கும் பிரச்சினையானது எப்போதும் இருக்கத்தான் செய்கிறது. ஆகையால், மனதை மூடி வைத்துவிட்டு இதயம் சொல்வதைக் கேட்டு நடந்தால் ஒரு போதும் நீங்கள் செய்வது தவறாகாது" என்று பதிலளித்தார்.

ஜூன் மாத மத்தியில், இவ்விரண்டு கருத்தரங்குகளும் முடிவுற்றன. மேலும், காட்டேஜின் நடைமுறைகளும், மாஸ்டரின் தினசரி வழக்கமுறைகளும் இயல்புநிலைக்குத் திரும்பின. மாஸ்டர் உடல் நலம் தேறுகிறார்; மற்றும் அவர், அனைத்து அப்யாசிகளையும் சந்திக்க மேலும் அதிக நேரத்தை ஒதுக்குகிறார்.

றேன். அவர்கள் பொய் பேசுவதாக நான் கூற, அதற்கு ஒரு வக்கீல், தாங்கள் முறையீட்டை மட்டுமே பின்பற்றுவதாகக் கூறினார். நீதிபதிகள் சரியான தீர்ப்பை வழங்க உதவவே வக்கீல்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் தங்கள் கட்சிக்காரர்கள் வெற்றி பெறவே உதவுகிறார்கள்" என்று சொன்னார். அந்தப் பெண், தான் தான் முதல் நேர்மையான அரசியல்வதியாக ஆகப்போவதாகக் கூறியதற்கு மாஸ்டர், "நீ தான் முதல் நேர்மையான அரசியல்வாதி என்றால், உன்னால் அனுசரித்துச்செல்ல முடியாது என்பதை விரைவில் நீ தெரிந்துகொள்வாய். இக்கால சூழ்நிலையில் எவரிடமும் சகிப்புத்தன்மையே இல்லை. நீ தூக்கி எறியப்படுவாய்" என்று சொன்னார். மேலும் அவர், "எது உனக்கும், நாட்டிற்கும் உதவுமோ, அதைச் செய். நான் அரசியலை மாற்றிக்காட்டுவேன் என்பது போன்ற கற்பனைகளின்பால் ஈர்க்கப்பட வேண்டாம் "என்றார். நான் ஒரு முறை பாபூஜி மகராஜிடம் ஊழலைப் பற்றிக் கேட்டேன். அதற்கு அவர், கடவுளால் மட்டுமே அதை மாற்ற முடியுமென்று கூறினார். அது ஒரு தனிமனிதனால் முயற்சிக்க முடியாத அளவுக்கு மிக ஆழமாகவும், விரிவாகப் பரவியும் இருக்கிறது. ஆகையால் நாம் பிரார்த்திக்கிறோம். ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுடைய சொந்த நலனுக்காக சட்டத்தை பின்பற்றி நடக்கும் வரை, அரசியலை மாற்ற, நாம் அரசியலில் ஈடுபட வேண்டுமென்பதில்லை. நீங்கள் உண்மை பேசும் போது, எவருமே உங்களை பாராட்டப்போவதில்லை. ஆனால், நீங்கள் உண்மையாக இருக்கிறீர்கள், நேர்மையாக இருக்கிறீர்கள் என்ற மனநிறைவு உங்களுக்கு இருக்கிறது. என் மாஸ்டர் கூறியபடி, வாய்மையே அதற்கான வெகுமதியுமாகும். 'நேர்மையாக இருந்ததால் உனக்கு என்ன கிடைத்தது? என்று மக்கள் கேட்பர். நான் நேர்மையாக இருப்பதால் எனக்கு ஏதாவது கிடைக்க வேண்டுமென்பதில்லை. ஆகையால், நாம் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்கிறோம்; அதுதான் அதற்கான வெகுமதியாகும்." என்று கூறினார்.

ஒரு சிறுவன், "மாஸ்டர், நான் என் தந்தையின் தொழிலில் சேர விரும்புகிறேன்" என்றான். அதற்கு அவர், "சரி, ஆனால் நேர்மையான தொழில் எப்போதும் பலன் கொடுக்கும் என்பதை நினைவில் கொள். நேர்மையான முதலீடு 8, 9 அல்லது 10 சதவீதம் லாபம் கொடுக்கும், ஆனால் நேர்மையற்ற முதலீடு 40சதவீதம் லாபம் தரும். ஆனால், அதில் ஓர் ஆபத்து இருக்கிறது, இல்லையா? நீங்கள் உங்கள் பணத்தை இழக்கலாம், அவப்பெயர் எடுக்கலாம், சிறைக்குச் செல்ல நேரிடலாம். ஆகையால், நேர்மை அதிக லாபம் தராதெனினும், உங்கள் முதலீடு பாதுகாப்பானதெனில், மகிழ்ச்சியான வாழ்வை அளிக்கும்." என்று பதிலளித்தார்.

மற்றொரு சிறுவன், "மாஸ்டர், எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை" என்றான். அதற்கு மாஸ்டர், "கவலைப்படாதே,



**சகஜ் சந்தேஷ் எண்: 2013.26 வியாழன், 6 ஜூன் 2013**

**மதிப்பிற்குரிய மாஸ்டரின் உடல்நலம் குறித்த அண்மைச் செய்தி**

அன்புள்ள சகோதர சகோதரிகளே,

மாஸ்டரின் உடல்நலம் குறித்த அண்மைச்செய்தியை அளித்து ஒரு மாதத்திற்கும் மேலாயிற்று. மாஸ்டருக்கு சிகிச்சை நல்ல பலனளிக்கிறது. அவரது உடல்நலம் எதிர்பார்த்ததைப் போலவே தேறி வருகிறது. அவரது எலும்புகள் மேலும் வலுப்பெற்று, அசைவாற்றல் மேம்பட்டிருக்கிறது. முழுமையாக குணமடைய இரண்டு மாத காலம் ஆகலாம்.

டாக்டர். நட்வர் ஷர்மா

## ஒமேகா முன்னாள் மாணவர்கள் கூட்டம்

ஜூன் முதல் வாரத்தில் நடைபெற்ற முன்னாள் மாணவர்கள் கூட்டத்தில் LMOISயை சேர்ந்த முதல் மற்றும் இரண்டாம் ஆண்டில் வெளிவந்த மாணவர்கள் சுமார் 75 பேர் பங்கேற்றனர். இளம் அப்யாசிகள் இந்த கருத்தரங்கிற்கு அனுமதி பெற்ற நாள் முதல், மாஸ்டரைச் சந்திக்க ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தனர். முடிவாக அவர்கள் மாஸ்டரை சந்தித்த போது அவர்களின் இதயங்களுக்கு எல்லை எதுவும் இல்லை என்று உணர்ந்தனர். முதல் நாள், மாஸ்டர் அவர்களுக்கு ஒரு சிட்டிங் கொடுத்து உரை நிகழ்த்தினார். அவர் தன்னிறைவு மற்றும் நேர்மையுடன் இருக்க வேண்டியது பற்றி பேசினார். அவர்கள் வழிகாட்டிகளாக இருக்க வேண்டுமென்றும், அவருடைய இந்தியா பற்றிய கனவு நிறைவு பெற, தான் மாறாமல் மற்றவற்றை மாற்றத் தூண்டுகோலாக இருக்கும் ஒரு வினையூக்கி போல, திறம்படச் செயல்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இரண்டாவது நாள் மாஸ்டரின் குடிலில் 9.00மணி சத்சங்கத்துடன் தொடங்கியது. அதனை தொடர்ந்து சகோதரர். கமலேஷ் படேல் தேர்ந்தெடுத்தல், அழுத்தம் மற்றும் தன் நிறைவு ஆகிய மூன்று விஷயங்கள் பற்றி பேசினார்.

அடுத்த மூன்று நாட்கள், குழுவினருக்கு, பயிற்சியாளர்களுடனான தீவிரமான அமர்வுகள் இடம் பெற்றன. அவற்றில், பல்வேறு விஷயங்களான தினசரி தியானம், மனப்பான்மை, சகிப்புத்தன்மை, அன்றாட பிரச்சனைகள் ஆகியவை இடம் பெற்றன. இது, அனைவரும் தங்களின் பிரச்சனைகளை பற்றி விவாதிக்க திறந்த மேடையாக அமைந்ததுடன், ஒருவருக்கொருவர் அவர்தம் சுய அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும், பயிற்சியாளர்களிடமிருந்து உதவிக்குறிப்புகள் பெற்றுக் கொள்ளவும் ஒரு வாய்ப்பாக அமைந்தது. ஐந்தாவது நாளில் பங்கேற்பாளர்கள் அனைவரும் இந்த கருத்தரங்கிலிருந்து தாங்கள் என்ன எடுத்துச் செல்கிறோம் என்பது பற்றிய கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். முன்னாள் மாணவர்கள், அவர்களுடைய ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களை சந்திக்கவும் அவர்களுடன் ஒரு நாள் செலவிடவும் செய்தனர். சகோதரர். பி. ஆர். கிருஷ்ணா மற்றும் சகோதரர். புனித் லால்பாய் அவர்களுடன் கலந்துரையாடினர்.

கருத்தரங்கு முடிவடைவதைக் குறிக்கும் வகையில், மாணவர்கள் ஒரு சிறு கலை நிகழ்ச்சியை மாஸ்டருக்காக தயார் செய்திருந்தனர். அதில் ஒரு சில பாடல்களும், ஒரு நடன (கார்பா) நிகழ்ச்சியும் இருந்தன. சகோதரர். கமலேஷ், முறையாக இந்த கருத்தரங்கை, "டிரான்ஸ்மிஷனின் விளைவு என்ன?" என்ற வினாவுடன் முடித்ததுடன், அடுத்த வருடம் அதற்கான விடையை சிந்தித்து வர வேண்டும் என்றும் கூறினார்.

கலை நிகழ்ச்சிக்குப் பிறகு, அவர்கள் மாஸ்டரை சந்தித்து ஒரு குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். அச்சமயம் மாஸ்டர் முன்னாள் மாணவர்கள் ஒமேகாவின் ஆன்மா போன்றவர்கள். எனவே "ஒமேகாவின் ஆன்மா" என்ற தலைப்பை அச்சிடப்படும் புகைப்படத்தில் குறிப்பிடும்படி கேட்டுக் கொண்டார்.

அடுத்த நாள் மாணவர்கள் தங்கள் தோள்களில் பொறுப்பையும், இதயங்களில் அன்பு, துணிவு மற்றும் அவா ஆகியவற்றையும் கொண்டு விடை பெற்று சென்றனர். அடுத்த வருடம் மேலும் சிறந்த முறையில் தயாராகி வருவதாக கூடுதலான உறுதியுடன் சென்றனர்.

## ஒமேகா நம்பிக்கை - ஒரு பயிற்சியாளரின் பார்வை

*சகோதரர். விக்டர் கண்ணன்*

எப்பொழுதும் பெருகி வரும் ஊழல் மற்றும் அதைப் பற்றிய உணர்வின்மை மிக்க இந்த காலகட்டத்தில், ஒமேகா பள்ளி மற்றும் முன்னாள் மாணவர்கள் எதிர்காலம் பற்றிய ஒரு நம்பிக்கையை அளிக்கின்றனர். ஒமேகா மாணவர்கள் இந்த பாதுகாப்பான சூழலிலிருந்து விடுபட்டு, தங்களுடைய உயர் கல்விக்காக, சந்தைக் கடை போன்ற இந்த உலகத்தின் சவால்களை சந்திக்க உள்ளனர். அக்கறையில்லாத, மற்றும், ஆன்மீகம் மற்றும் சமநிலை வாழ்க்கையைத் தொடர்வதற்கு உகந்ததாக இல்லாத வெளி உலகத்தின் உண்மையான சவால்களை அவர்கள் சந்திக்கிறார்கள். மேலும், புதிதாக கிடைக்கப் பெற்ற சுதந்திரம், மற்றும் பயனற்ற பழக்கங்களை ஏற்படுத்தும் புதிய வாய்ப்புக்கள் ஆகியவற்றால் கூட கவரப்படுகிறார்கள்.

ஆகையால் வருடத்திற்கு ஒருமுறை அவர்களை மணப்பாக்கத்தில் ஒன்று கூடச்செய்வது மாஸ்டரின் ஒரு மிகச்சிறந்த யோசனையாகும். இதனை, இதில் பங்கேற்பவர்கள் அனைவரும் கவனித்து நோக்க வேண்டியது, தேவையான ஒன்றாகிறது. அவர்கள் நிலையைப் புரிந்துகொள்வதற்கும், அவர்கள் சொல்வதைக் கேட்பதற்கும் பெரியவர்களுக்கு இது ஒரு வாய்ப்பாக இருந்தது. பெரியவர்களுக்கும், அவர்தம் இளமைக்கால நினைவுகள், ஈடுபாடுகள் மற்றும் குழப்பங்கள் ஆகியவற்றை நினைவு கூறவும், அந்த நினைவுகளை முன்னாள் மாணவர்களிடத்தில் பகிர்ந்து கொள்ளவும் தக்க சமயமாக இருந்தது. இது அவர்களுக்கு, மனம் திறந்து பகிர்ந்து கொள்ளவும், நம்பிக்கை பெறவும் மற்றும் விரைவில் நிம்மதியடைந்து சாதாரணமாக இருக்கவும் உதவியது. ஆகையால் அவர்கள் மிகுந்த நம்பிக்கை மற்றும் தீர்வுடன் திரும்பிச் செல்கின்றனர். பல்வேறு பல்கலைக் கழகங்களின், அறிவியல் மற்றும் ஆன்மீக சங்கம், வெப்பைனர் மூலம் குளோபல் இளைஞர் நெட்வொர்க், மற்றும் Uconnect வாயிலாக நடைபெற்ற சுயமேம்பாட்டு நிகழ்ச்சிகள் போன்ற, மாணவர்களின் செயல்பாடுகளைப் பகிர்ந்து கொண்டது அவர்களுக்கு பேருதவியாக இருந்தது.

மாணவர்களை வலுப்படுத்துதல், அவர்களுக்கு ஆதரவாக இருத்தல் மற்றும் தெளிவு படுத்தல் போன்ற நோக்கங்களை அடைந்ததாக நான் நம்புகிறேன். எனினும் அவ்வப்போது ஏற்படும் தற்காலிகத் தடைகளை ஒருவருக்கொருவர் இடைவிடாது தொடர்பு வைத்துக்கொள்வது மூலம் தீர்க்க வேண்டும்.ஏற்கனவே இருக்கும் நண்பர்களைத் தவிர, இன்னும் அதிகம் பேரைச் சேர்த்து, ஒரு பெரிய சமுதாயமாக விரிந்து, சகஜ மார்க்கத்தில் ஒருங்கிணைக்க, இது செய்யப்பட வேண்டும். எப்படியாகிலும், தொடர்ந்து நடைபெறும் செயல்பாடுகளைப் பகிர்ந்து கொள்ள ஒரு தளம் உதவும்.

இவர்கள் மிகவும் நல்ல, உண்மையான குழந்தைகள் மற்றும் மாஸ்டர் எதற்கு இருக்கிறார் என்பதைப்பற்றி ஆழ்ந்த அக்கறை கொண்டவர்கள் என்றும், நிகழ்ச்சியின் மூன்றாவது நாளன்று எனக்குத் தோன்றியது. எனவே, இக் குழந்தைகளுக்கு நன்றி கூறி, நம்பிக்கை இருக்கிறது என்ற மன எழுச்சியுடன் திரும்பி வந்தேன். அவர்களுக்கும், சமுதாயத்திற்குமான பொறுப்புணர்வை, இளம் வயதிலேயே அவர்களுக்குக் கற்பித்தால், அது ஒரு புதிய, திறம் வாய்ந்த நாட்டை உருவாக்குவதில் இருக்கும் அவசரத் தேவைக்கு கூடுதலான நன்மையைத் தரும்.

## மூத்த அப்யாசிகளுக்காக பரம் தாம் ஆசிரமம்

மாஸ்டர், பரம் தாம் ஆசிரமத்தை, மூத்த அப்யாசிகள் (60 வயதுக்கு மேற்ப்பட்டவர்கள்) தங்கி, தங்களின் சாதனாவை மேம்படுத்திக் கொள்ளப் பயன்படும் ஒரு இடமாக ஆசீர்வதித்துள்ளார். இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள விரும்பும் அப்யாசிகள் 2 முதல் 6 மாதங்கள் வரை தங்குவதற்கு விண்ணப்பிக்க முடியும். அவர்களுக்கு தங்குமிடம், உணவு மற்றும் அத்தியாவசியமான வசதிகள் ஆகியவை வழங்கப்படும். தங்குமிடங்கள் காலியிருப்பதைப் பொறுத்து, அதற்கான கால அட்டவணையின் தகவல் அப்யாசிக்கு அனுப்பப்படும். கீழே தரப்பட்டுள்ள இணைய தள இணைப்பு, பரம் தாம் பற்றியும், அதன் முகவரி, அதில் உள்ள வசதிகள் மற்றும் பரம் தாமில் தங்குவதற்கான விண்ணப்பப் படிவம் போன்ற தகவல்களையும் தருகிறது. http://www.sahajmarg.org/smww/param-dham. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் paramdham@srcm.org. என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.



## மிஷனின் வரலாற்றிலும், எதிர்காலத்தற்கான மூலாதாரங்களை உருவாக்குவதிலும் அப்யாசிகளின் பங்கேற்பு

இதுவரையில் மிஷனின் காப்பகம், ஆவணங்கள் புகைப்படங்கள் மற்றும் ஒலி-ஒளிப் பதிவுகள் போன்றவற்றைப் பத்திரமாகப் பாதுகாத்து சேகரித்து வைப்பதில் கவனம் செலுத்தி வந்தது. தற்போது அவற்றிற்கு, ஒரு நூறு வருடங்கள் கழித்து மிஷன் மற்றும் சார்ந்த நிறுவனங்களை, ஒரு வரலாற்று ஆய்வாளர் வரலாற்று ஆய்வு செய்ய ஏதுவாகும் வகையில், ஒரு வரலாற்று கண்ணோட்டத்தைத் தர முயன்று வருகிறோம். இன்று, நமக்கு சாதாரணமாகவும் வழக்கமானதாகவும் இருக்கும் பல நிகழ்வுகள், ஆயிரமாயிரம் செய்திகளைப் பல ஆண்டுகளுக்குப் பின்னால் வரும் ஆராய்ச்சியாளர்களுக்குத் தெரிவிக்கும்.

ஆகையால், புராதன ஆவணங்களைச் சேகரிப்பதும், தற்போதைய ஆவணங்களை பத்திரப்படுத்துவதும் மிக முக்கியமானதாகிறது. மணப்பாக்கத்தில் அமையவிருக்கும் இக்காப்பகத்தை வளர்ப்பதில் சேவை புரிய, வரலாற்று பிண்ணனியுடைய அப்யாசிகள், காப்பக வழிமுறை அல்லது நூலக அறிவியல் மற்றும் கணிணித்திறமை உள்ள அப்யாசிகளை நாம் அழைத்திருக்கிறோம். அனுபவமிக்க, தகுதி வாய்த்த அப்யாசிகளுக்கு முழு நேர வேலை வாய்ப்புகளும் வழங்கப்படும்.

### துவக்கங்கள்

வெவ்வேறு நாடுகள்/மண்டலங்களைச் சார்ந்த தன்னார்வமிக்க அப்யாசிகள், இந்த வரலாற்றுக் காப்பகத்திற்குத் தேவையான மூலப் பொருட்களைத் தேடித்தர முன் வந்துள்ளனர். மூத்த, நீண்டகால அப்யாசிகளை நேர்காணல் செய்வதற்கும், மிஷனின் ஆரம்ப கால வளர்ச்சி மற்றும் மாஸ்டர்களின் பங்களிப்பு பற்றிய அவர்களின் பிரதிபலிப்புகளைப் பதிவு செய்யவும் துவங்கியுள்ளனர். இந்திய மண்டல வரலாற்று ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும், இதர நாடுகளின் ஒருங்கிணைப்பாளர்கள், தன்னார்வமான அப்யாசிகளுக்கு, விரிவான வழி காட்டுதல், நெறிமுறைகள் அமைத்தல் ஆகியவற்றுடன், இம்முயற்சியில் அவர்களை கைகோர்த்து செல்ல ஒரு உற்சாகமான குழுவையும் அமைத்திருக்கின்றனர். இந்தப்பணி, மிஷனின் தொடர்ந்து வரும் வளர்ச்சியால், காப்பக ஆவணங்களை புதுப்பித்தல், புதிய ஆவணங்கள், புகைப்படங்களைச் சேகரித்தல் என முடிவுறாமல் நடந்து கொண்டிருக்கும். மிஷனின் வரலாற்றின் பெரும அளவில் (Macro level) ஆராய்ச்சி செய்ய விரும்பும் அப்யாசிகள், மிஷனின் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். இப்போதுள்ள நிலையில் மிஷனின் வருங்கால வரலாற்று மூலாதாரங்களைப் பாதுகாப்பதில் அப்யாசிகளின் ஆர்வமானது இதே போல தொடரும் நிலையில், இந்த பெரு முயற்சியின் எதிர்காலமானது மிகவும் உறுதியளிப்பதாக தோன்றுகிறது. மாஸ்டர், 2013 ஜூன் மாதம் 5 ஆம் தேதி நடந்த செயற்குழு கூட்டத்தில், இம்முயற்சியைப் பற்றி சுருக்கமாக கூறியபோது "நாம் நமது எதிர்கால வரலாற்றை நிகழ்காலத்தில் நிர்மாணித்துக் கொண்டிருக்கிறோம்" என்றார்.

### *தலைவரின் வழிநடத்தல்*

இது, இந்த உலகளாவிய முயற்சியில், அவருக்குள்ள தனிப்பட்ட ஆர்வத்தை காட்டுகிறது. நம் மிஷனில், மாஸ்டர் ஒருவர் மட்டும் தான், அவரின் மாஸ்டரின் வாழ்க்கை நிகழ்வுகள், அவரது போதனைகள், பிரயாணங்கள் அல்லது தன்னுடைய ஆன்மீக பரிணாம வளர்ச்சி மற்றும் சொந்த வாழ்க்கை ஆகியவற்றை பின்வரும் சந்ததியினருக்காக கவனமாக பதிவு செய்து வந்திருக்கிறார். அவருடைய கடிதப் போக்குவரத்துக்களையும், தினக்குறிப்புக்களையும் ஒரு வரலாற்று ஆசிரியர் வரலாற்று ஆதாரங்களை சேகரிப்பது போல பாதுகாத்து வந்திருக்கிறார். இது போல ஒவ்வொரு அப்யாசியும், மிஷனின் வரலாற்றில் பங்கேற்கும் போதும், தற்போதைய நிகழ்வுகளிலும் தங்களின் பதிவுகளை கவனமாகச் செய்து வந்தால் அது எவ்வளவு பெரிய தகவல் செல்வமாக இருக்கக்கூடும் என்பதை கற்பனை செய்து பார்க்க முடிகிறது.

**நீங்கள் எவ்வாறு உதவலாம்?**

1. நீங்கள் தன்னார்வத்தொண்டராக விரும்பினால், உங்கள் மண்டல ஒருங்கிணைப்பாளரை அணுகி, அவர் மூலம், வரலாற்று ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளவும்.
2. உங்களுக்கு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களைக் கொடுக்க விரும்புவர்களைப் பற்றித் தெரிந்தால், உங்கள் மண்டல வரலாற்று ஒருங்கிணைப்பாளருக்கு அறிமுகப்படுத்தவும்.

மேலும் விவரங்களுக்கு, mission.history@srcm.org என்ற மின்முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

## குழந்தைகளுக்கான கோடைகால முகாம்



### அற்புதமான பத்து - இந்தூர், மத்திய பிரதேசம்

அற்புதமான பத்து ("The Wonderful Ten") என்கிற புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு, குழந்தைகளுக்கான 6 நாட்கள் நிகழ்ச்சி ஒன்று, சுமார் 40குழந்தைகளுக்காக, இந்தூர் மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த புத்தகம், கதை சொல்லும் விதத்தில், நாம் நமது வாழ்க்கையை கடவுளின் நினைவோடு சரியான விதத்தில் வாழ்வது, இருக்கும் வளங்களை புத்திசாலித்தனமான விதத்தில் பயன்படுத்துவது, சகோதரத்துவ சிந்தனையோடு, எல்லோருடனும் அன்புடனும் கருணையுடனும் வாழ்வது போன்றவற்றைக் கூறுகிறது. பத்து நியமங்களை, குழந்தைகளுக்குக் கற்பிக்க, இப்புத்தகம் பயன்படுத்தப்பட்டது.

பாபூஜி மகாராஜ், சரியான விதத்தில் வாழ்வது பற்றி குழந்தைகளுக்கு சொல்வது போன்ற ஒரு நாடகத்தோடு, நிகழ்ச்சி துவங்கியது. ஒவ்வொரு நாளும் சகஜ மார்க்கத்தின் இரண்டு நியமங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது இப்புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ள நன்னெறிகளை, கருத்துருவாக்கம், வடிவமைக்கப்பட்ட விளையாட்டுக்கள் மற்றும் நாடகங்கள் மூலம், குழந்தைகளுக்கு எடுத்துக் கூறுவதில், அநேக தன்னார்வத் தொண்டர்கள் ஈடுபட்டிருந்தனர். குழந்தைகள் அந்த நிகழ்ச்சியை முழுவதுமாக அனுபவித்து மகிழ்ந்தனர். இந்த நிகழ்ச்சி அவர்களிடம் நல்ல பாதிப்பை ஏற்படுத்தியது.

### விசாகப்பட்டினம்

குழந்தைகளுக்கான 3 நாள் முகாம், மே மாதம் 19 லிருந்து 21 வரை, 7முதல் 17வயது வரையுள்ள சுமார் 100 குழந்தைகளுக்காக நடத்தப்பட்டது. அந்த முகாம் பிரார்த்தனையோடும் அதைத் தொடர்ந்த அறிமுகத்தோடும் துவங்கியது. குழந்தைகள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். "தியானத்தின் பலன்கள்" "நன்னடத்தையை உருவாக்கிக்கொள்ளுதல்" என்ற பொருட்களில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. தலைமைப் பண்பை வளர்த்துக்கொள்ளுதல் மற்றும் குழுவாகச் செயல்படுதல், நமது குருக்களின் குழந்தைப் பருவ சித்தரிப்பு ஆகியவற்றின் மீதான தொகுப்புரைகள் இருந்தன.



வர்ண ஓவியம் தீட்டுதல், கைத்திறன் வேலை, பொம்மைப் படங்களைப் பார்த்தல், வாக்குவாத வகுப்புகள், களிமண் மாதிரிகள் செய்தல், வினா விடை, வெளிப்புற விளையாட்டுகள் போன்றவை இந்த நிகழ்ச்சியின் செயல்பாடுகளாக இருந்தன. இந்த நிகழ்ச்சியின் போது, தன்னார்வ இளைஞர்கள் ஆசிரம வளாகத்தை தூய்மைப்படுத்தினர். இரவு 9.00 மணிக்கான அகிலமளாவிய பிரார்த்தனை, நாட்குறிப்பு எழுதுதல், உறங்கும் முன் பிரார்த்தனை ஆகியவற்றின் முக்கியத்துவம் அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. உடற்பயிற்சி, சூரிய உதயத்தை கவனித்தல் ஆகியவை காலைப் பொழுதின் வழக்கமான செயல்முறைகளாக இருந்தன. அந்த குட்டிக் குழந்தைகள், சுயக் கட்டுப்பாடு, உண்மையைப் பேசுவதற்கான தைரியம், இனிமையான இயற்கைப் பண்புகள் மற்றும் பொறுமை ஆகிய நனெறிகளைப் பற்றிய வழிகாட்டுதல்களைப் பெற்றார்கள். இந்த நிகழ்ச்சி, குழந்தைகளுக்கும், தன்னார்வலர்களுக்கும் முக்கிய விருந்தினர் அவர்களால் பரிசுகள் வழங்குவதோடு முடிவு பெற்றது. ஒரு சில பெற்றோர்கள் பயிற்சியில் ஆர்வம் காட்டினர். ஒரு சிலர் மிஷனில் சேர்ந்தும் இருக்கிறார்கள். குழந்தைகள், இந்த கோடை கால முகாமில் பங்கேற்றதில், தங்களது மகிழ்ச்சியையும், ஆர்வத்தையும் வெளிப்படுத்தினர்.

### குழந்தைகள் நிகழ்ச்சி, ஜல்காவ், மஹாராஷ்ட்ரா

ஜல்காவ் மற்றும் அருகில் உள்ள மையங்களிலிருந்து வந்திருந்த சுமார்26 குழந்தைகளுக்காக, ஜூன் 9 அன்று, ஜல்காவ் மையத்தில் ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சி பிரார்த்தனையுடன் துவங்கியது. அதன் பிறகு, குழந்தைகள் ஒரு பூங்காவிற்கு வெளிப்புற விளையாட்டுக்களுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். சுவையான காலை உணவிற்குப் பின், கதை சொல்லுதல் பகுதியும், அதனை தொடர்ந்து, சிறு தொகுத்து வழங்குதலும் இருந்தது. மதிய உணவு இடைவேளையில் குழந்தைகள் பல வர்ண காகிதங்களைக் கொண்டு பலவித வடிவங்கள் செய்யும் கலையைக் கற்றுக் கொண்டனர். 'தொலைக்காட்சியின் மூலம் என்ன செய்வது?' என்பது பற்றிய ஒரு முக்கியமான கலந்துரையாடலும் இருந்தது. பரிசுகள் வழங்குவதோடு அந்த நிகழ்ச்சி முடிவு பெற்றது. குழந்தைகள் மிகுந்த ஆர்வத்தோடு கலந்து கொண்டனர்.

ஜல்காவ் மற்றும் அருகிலுள்ள மையங்களின் சுமார் 30 அப்யாசிகளுக்கு, ஒரு முழு நாள் நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது. பல்வேறு தலைப்புக்களில், முறை சாரா உரையாடல்கள் நடைபெற்றன. ஜூலை 24 ஆம் தேதி உற்சவத்தை வாரங்காவ் மையத்தில் நடத்துவதற்கும் முடிவு செய்யப்பட்டது. அந்த முழு நாள் நிகழ்ச்சி மாலை 5.00 மணி சத்சங்கத்துடன் முடிவடைந்தது.



## சீதாப்பூர், உத்திரபிரதேசம்




பிரிஜ் கிஷோர் டன்டன் மின்ட்டோ தேவி மகளிர் பள்ளியில் பயிலும், 6முதல் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு, சீதாப்பூர் மையத்தில், மே 21 முதல் 30 வரை, கோடைகால பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டது. மாணவர்களுக்கு ஆன்மீகத்தில் ஆர்வத்தை கொணர்வதுதான் முகாமின் நோக்கமாகும். நான் யார்?, உடல், மனம், அறிவு, அன்பு, இயற்கை, பிரார்த்தனை, குரு மற்றும் பரம்பொருள் ஆகியவற்றை உதவியாளர்கள் நிறைவு செய்தனர். நடப்பு நிகழ்வுகள் மற்றும் சமூக ஈடுபாடுள்ள மற்ற தலைப்புகளை, அந்தந்த துறைகளின் நிபுணர்களைக் கொண்டு கலந்துரையாடப்பட்டது.

மே 24 அன்று, 'போலீஸ் செயல் பாட்டுக் கட்டமைப்பு' என்ற தலைப்பில், சீதாப்பூர் போலீஸ் அதிகாரி (SSP) திரு. B.B. சிங் அவர்களும், 'மாசு மற்றும் நமது சூழல்' என்பது பற்றி, N.C.C.யைச் சேர்ந்த கர்னல் P.S. பிந்த்ரா அவர்களும் ஆற்றிய உரைகள் குழந்தைகளை வெகுவாகக் கவர்ந்தன. பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டு, முகாம் நிறைவு பெற்றது.

### அகமதாபாத் ஆசிரமம்

குஜராத்தில், இரு மண்டலங்களுக்கும் சேர்த்து, மே 31 முதல் ஜூன் 2 வரை, குழந்தைகளுக்கான 3 நாள் முகாம் ஒன்று நடைபெற்றது. 7 - 17 வயதுடைய சுமார் 75 குழந்தைகள் கலந்து கொண்டனர். பத்து நியமங்களில் கூறப்பட்டுள்ளது போன்ற, நேர்மறையான வாழ்க்கை நெறிகளை மனதில் ஆழப் பதிய வைப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பாடல்கள் கற்றுக்கொள்தல், கலையும் கைத்தொழிலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, விளையாட்டுக்கள், வினாடி வினா மற்றும் வாழ்க்கைக் கல்வி போன்ற செயல்பாடுகள் இருந்தன. சிறு கதைகள் மற்றும் பத்து நியமங்களை ஒட்டிய குறு நாடகங்கள் அமைக்கப்பட்டன. தெய்வீகம் ஈன்றெடுத்த ஆன்மாவான மனிதனின் பரிணாம வளர்ச்சி குறித்து, முகாமின் தன்னார்வ தொண்டர்கள் அரங்கேற்றிய நாடகமானது, அனைவராலும் பாராட்டப்பட்டது.

சில குறிப்பிட்ட செயல்பாடுகளை நிர்வகித்து, குழுக்களை மேற்பார்வை செய்வதற்கு 15 தொண்டர்கள் இடையறாது பணியாற்றினர். முகாமில், ஒழுக்கம், கால நிர்வாகம், சுத்தம் மற்றும் பாதுகாப்புக்காக, குழுக்களால் கண்காணிக்கப்பட்டன. 600 வருட புராதன நகரமான அகமதாபாத்தின் வரலாற்றை, குழந்தைகளுக்கு வெளிப்படுத்திய 'நகர பாரம்பரிய நடை' சிறப்பு அம்சமாக இருந்தது. குழந்தைகள் மகிழ்ச்சியாக இருந்து, செயல்பாடுகளில் இருந்து நிறைய கற்றுக்கொண்டனர் என்பது, பின்கருத்துக்களால் அறியப்பட்டது.


### பன்வேல், மும்பை

மே 17-19 வரை, பன்வேல் ஆசிரமத்தில், 8-12 மற்றும் 13-17 வயது குழுமத்தில், ஒவ்வொரு குழுமத்தில் இருந்தும் சுமார் 45 குழந்தைகள், 3 நாள் முகாமில் கலந்து கொண்டனர். அவர்கள், அருகிலுள்ள புனே, நாசிக் மற்றும் கோபாலி ஆகிய மையங்களிலிருந்து வந்திருந்தனர். 17ந் தேதி, ஆரம்ப உரையாடலுடன் முகாம் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து, கேளிக்கையின் பொருள், பகிர்ந்தளித்தலில் தெய்வீக வழியும், மனித வழியும் மற்றும் நான் யார்? ஆகிய தலைப்புகளில் குழுச்செயல்பாடு நடைபெற்றது. சிறியவர்களின் பொறுப்புணர்வும், உற்றுநோக்கலும், பயிற்சியாளர்களைப் பிரமிக்க வைத்தது. மாலை நேர கலந்துரையாடல் பகுதியானது, "அன்பை ஏற்படுத்திக் கொள்தல், மற்றும் பொறாமை, முன்கணிப்பு மற்றும் வெறுப்பு இவற்றின் உணர்வுகளை விட்டு ஒதுக்குதல்" குறித்து இருந்தது. படுக்கைக்குச் செல்லும் முன்பாக, பதின்ம வயதினர் (teens) நாட்குறிப்பு எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

இரண்டாம் நாளானது யோகா பயிற்சியுடன் துவங்கப்பட்டது. "பணத்தின் முக்கியத்துவம்" என்ற பொருளில், பதின்ம வயதினர் கலந்துரையாடிய வேளையில், சிறியவர் குழுவிற்கு பத்து நியமங்களை எண்களுடன் தொடர்புபடுத்தி, புதுமையான மற்றும் பயனுள்ள வழியில் விவரிக்கப்பட்டன. குழந்தைகளுக்கு அவர்களைக் கவரும் வகையில் குறும்படங்கள் காண்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வினா-விடைப் பகுதி இருந்தது. 'வெற்றிக்கான படிகள்' என்ற உரையாற்றிய பேச்சாளரிடம், எதிர்கால வாழ்க்கை குறித்த வினாக்களை அவர்கள் கேட்டனர். சகோ. சுதேஷ் திரிபாதி அவர்கள், "நம்புதற்கரிய இந்தியா" மற்றும் "10 எதிர்பாராத அறிவியல் கண்டுபிடிப்புகள்" போன்ற தலைப்புகளில் படங்கள் காண்பித்தார். அதைத் தொடர்ந்து, மூளைக்கு வேலை மற்றும் ஒளியியல் திரிபுக்காட்சி (optical illusions) ஆகியவை பற்றிய வினா- விடைப் பகுதி இருந்தது.

கடைசி நாளன்று, வெளி விளையாட்டிற்காக குழந்தைகள் அருகிலுள்ள தோட்டத்திற்கு கூட்டிச் செல்லப்பட்டனர். மாஸ்டர் கூறிய கதைகளை நாடகங்களாக அமைத்து, சென்ற இரண்டு இரவுகளில் பயிற்சி செய்திருந்த நாடகங்களை குழந்தைகள் நடித்துக் காட்டினர். பரிசு வழங்கும் நிகழ்வுடன் முகாமானது நிறைவு பெற்றது. அனைத்து குழந்தைகளும் மகிழ்ச்சியாக இருந்தனர் என்பதற்கு அவர்களிடம் இருந்து பெறப்பட்ட பின்கருத்துக்களே சான்றுகளாகத் திகழ்ந்தன.





## புதிய நியமனங்கள்

சகோ. கே.டி. கிருஷ்ணன்
மையப் பொறுப்பாளர், பாலக்காடு

சகோ. சி.கே. பிரமோத்
மையப் பொறுப்பாளர், கொச்சி/ எர்ணாகுளம்

சகோ. பி.கே. கோபிநாத்
மையப் பொறுப்பாளர், பட்டம்பி



## மண்டல அளவிலான இளைஞர்களுக்கான கருத்தரங்கம், போபால், மத்தியப்பிரதேசம்.

மண்டல அளவிலான கருத்தரங்கமானது போபால் ஆசிரமத்தில் மே 11, 12 ஆகிய இரண்டு நாட்கள் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 18 - 35 வயது வரையுள்ள 43 இளம் அப்யாசிகள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் விதிஷா, போபால், கன்ஜ்பசோடா, ஹொசாங்காபாத், இந்தூர், ஜபல்பூர், திகம்கர், பெரசியா, தில்லோத், ரேவா ஆகிய ஆசிரமங்களில் இருந்து வந்திருந்து, முழு ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

கருத்தரங்கத்தின் மைய கருத்து 'சகஜ மார்க்கத்தை வாழ்க்கையுடன் ஒருங்கிணைத்தல்' என்பதாகும். 11ம் தேதி, பதிவு செய்தலுக்குப் பின், 'வாழ்க்கையில் சமநிலை' என்ற தலைப்புடன் நிகழ்ச்சி தொடங்கியது. இரண்டாவது நாள் 'இணைந்து செயல்படுதல்' என்ற தலைப்பின் மீது கவனம் செலுத்தப்பட்டது. இரண்டு தலைப்புகளும், உரைகள், மாஸ்டரின் வீடியோ, சுய ஆய்வு, கருத்துகளை முன் வைத்தல், சிறுகுழு செயல்பாடு, வட்ட நேரம், தனிநபர் ஆய்வு, புதிர்கள் மற்றும் விளையாட்டு ஆகிய பல்வேறு செயல்பாடுகளைக் கொண்டிருந்தன. இளம் அப்யாசிகள் இதயப்பூர்வமாகக் கலந்துகொண்டு, மாஸ்டரால் உருவாக்கப்பட்ட தெய்வீக சூழலை நன்கு அனுபவித்தனர். மாஸ்டருடனான இணைப்பானது, வாழ்வை சமன்படுத்துதல் மற்றும் இணைந்து செயல்படுதல் ஆகியவற்றுக்கு ஒரு திறவுகோலாக எடுத்துச் செல்லப்பட்டது. அனைத்து பங்கேற்பாளர்களும் மனநிறைவுற்று, இதுபோன்ற மற்றொரு நிகழ்ச்சியை விரைவில் நடத்துமாறு தங்கள் கருத்தை தெரிவித்தனர்.

## வெள்ளிவிழா கொண்டாட்டங்கள், விசாகப்பட்டினம்

மாஸ்டரால், இந்த ஆசிரமம் மே 15,1988 அன்று திறந்து வைக்கப்பட்டது. மையத்தின் அப்யாசிகள் இதைக் கொண்டாட நினைத்தனர். மாஸ்டர், சிறப்பான இந்த நேரத்தைப் பொருத்தமாகக் கொண்டாடும்படி அறிவுறுத்தி, அனுமதி அளித்தார்.

600 க்கும் மேற்பட்ட அப்யாசிகள் சுற்றியுள்ள 12 துணை மையங்களில் இருந்து வந்திருந்தனர். விழா மே 15 அன்று 9 மணி சத்சங்கத்துடன், 1988ல் மையப் பொறுப்பாளராக இருந்த சகோ. விஸ்வபதி சாஸ்திரி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. 1988முதல் பயிற்சியிலுள்ள அப்யாசிகளுடன், மிஷனின் செயலர்களும் பாராட்டப்பட்டனர்.

இந்நிகழ்ச்சிக்கு, முக்கியமாக, 1988ல் மிஷனில் இணைந்து, பிறகு விலகிப்போன அப்யாசிகளை, மையப்பொறுப்பாளர் சகோ. கே. சப்தகுமுலு அழைத்திருந்தார். அவர்களிலிருந்து சுமார் 50 பேர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, ஆசிரமத்தில் நேரத்தை கழித்தனர். அவர்களில் சிலர் மீண்டும் பயிற்சியைத் துவங்கும் விருப்பதைத் தெரிவித்தனர்.

1988ல் ஆசிரம திறப்பு விழாவில் மாஸ்டர் சில உரைகளை வழங்கியிருந்தார். அதே தலைப்புகளான 'மாஸ்டருடனான உறவு' 'ஆசிரமங்களின் நோக்கம்' மற்றும் 'பயிற்சிக்கான பிரதான தேவை' ஆகியவை பேசுவதற்கு தலைப்புகளாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

நிகழ்ச்சி மாலை 6.30 மணி சத்சங்கத்துடன் முடிவுக்கு வந்தது. இந்நிகழ்ச்சி, உள்ளூர் தெலுங்கு செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்டது. அனைத்து அப்யாசிகளுக்கும் அது ஒரு மறக்கமுடியாத நாளாக இருந்தது. மாஸ்டரது அருளால் நிரப்பப்பட்டிருந்த விழாவிற்காக, அனைவரும் தங்கள் மகிழ்ச்சியையும் நன்றியுணர்வையும் தெரிவித்தனர்.





# தியோரியா ஆசிரமம், உத்திர பிரதேசம்

## ஒளி மையம்

தியோரியா மாவட்டத்தின் தலைமையகம் தியோரியா. இது கிழக்கு உத்தரப் பிரதேசத்தில், கோரக்பூரிலிருந்து சுமார் 50 கி.மீ தூரத்தில் உள்ளது. தியோரியா என்றால் கோயில்கள் இருக்குமிடம் என்று பொருள்படும். தியோரியா மையம் 1994-ல் உருவானது. சப்பராவின் (பீஹார்) பிரிபெக்ட், சகோ. ராமதாஸ் சிங், தியோரியா மையம் உருவாகக் காரணமாக இருந்தார். மையத்திற்கு அவருடைய தொடர்ந்த வருகைகளால், மையத்தின் முதல் பிரிபெக்ட், சகோ. அஜய் திவாரி கிடைத்தார். சகோ. திவாரி கடுமையாக உழைத்து, மையத்தின் எண்ணிக்கையை பலமடங்காக உயர்த்தினார். சமூகத்தின் அனைத்து துறைகளிலும் இருப்பவர்கள் மிஷனில் இணைந்தனர். அவ்வாறு வந்த சகோ. ராம சங்கர் தீக்ஷித், மாஸ்டருடன் BHUவில் உடன் பயின்றவர். தற்போது பிரிபெக்டாக இருக்கிறார். 15-அக்டோபர்-1999 அன்று மாஸ்டர் சில மணிநேரங்கள் தியோரியாவில் தங்கினார். மிகக் குறுகிய நேரமே இருந்தாலும், தியோரியா மையத்தின் அப்யாசிகளுக்கு, அது ஆசிர்வதிக்கப்பட்ட தருணங்களாக இருந்தது.







சகோ. தீக்ஷித்தின் இல்லத்தில், ஞாயிறு சத்சங்கம் நடைபெற்று வந்தது. அப்யாசிகளின் எண்ணிக்கை உயர்ந்ததால், ஆசிரமத்தின் தேவை அனைவராலும் உறுதியாக உணரப்பட்டது. வைத்ய பரஸ்நாத் திவாரி, Dr. முர்ஜானி, மற்றும் சகோ. I.D. கேதியா ஆகியோர் கொண்ட குழு, அப்யாசிகளின் துணையுடன், 21-ஜுன்-2001 அன்று ஆசிரமத்திற்கான நிலம் வாங்க உதவியது.

1.5 ஏக்கர் கொண்ட ஆசிரம நிலம், தியோரியா நகரத்திலிருந்து சுமார் 4 கி.மீ தூரத்திலிருக்கும் சோனுகாட் என்னுமிடத்தில் இருக்கிறது. ஆசிரம கட்டுமானப்பணி, 19-மார்ச்-2006ல் ஆரம்பிக்கப்பட்டது. சமையலறையுடன் கூடிய, 65x40 அடிகளில் அமைந்த தியானக்கூடம், 100 அப்யாசிகள் தியானம் செய்வதற்குப் போதுமானதாக உள்ளது. மாஸ்டர் வழிகாட்டியபடி, மிஷனின் செயலாளர் சகோ. U.S. பாஜ்பாய், 16-நவம்பர்-2008 அன்று ஆசிரமத்தைத் திறந்து வைத்தார். மாஸ்டர் அன்புடன்,'சாந்தி ஆசிரமம்' என்று பெயரிட்டார்.




கழிவறைகள், ஆசிரம பொறுப்பாளர் அறை மற்றும் அமைதியான அழகைக் கூட்டும் ஒரு சிறிய தோட்டம் போன்ற வசதிகளுடன் ஆசிரமம் முழுமையடைந்துள்ளது. அப்யாசிகள் இரவு நேரத்தில் தங்குவதற்கான வசதிகள் உள்ளன. சுமார் 80 அப்யாசிகள் முறையாக ஞாயிறு சத்சங்கத்திற்கு கூடுகின்றார்கள். அவர்கள், அருகிலிருக்கும் மையங்களின் அப்யாசிகளும் பங்கேற்க, ஆசிரமத்தில் ஆன்மீக விழாக்கள் கொண்டாடுகின்றனர். ஞாயிறு சத்சங்கம் தவிர முக்கிய செயற்பாடுகளான அப்யாசி பயிற்சி நிகழ்ச்சிகள், கட்டுரை எழுதும் நிகழ்ச்சி ஆகியவற்றையும், உள்ளூர் அப்யாசிகள் ஏற்பாடு செய்கின்றனர். ஆசிரம நிர்வாக செயற்குழு, எதிர்கால திட்டங்களாக வாயிற்கதவுகள் அமைப்பது, ஆசிரம வளாகம் முழுவதும் சூரிய ஒளிப்பயன்படுத்துதல் போன்றவற்றை வைத்துள்ளது.

நம்முடைய ஆன்மீக முன்னேற்றத்திற்காக, மதிப்பிற்குரிய மாஸ்டர் அவர்கள் அன்போடு அளித்த ஆசிரமத்தைப் பெறுவதற்கு நாம் உண்மையாகவே ஆசிர்வதிக்கப்பட்டவர்கள்.



To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2013 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. “Shri Ram Chandra Mission", "Sahaj Marg", “SRCM”, “Constant Remembrance” and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.